**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : C.C. 324/2023**

**Prosecution witness : எ.ம.சா.1** **Date : 29.01.2024**

| | |
|---|---|
| **Name : சுதாகர்** | **Caste : கொங்குவெள்ளாளர்** |
| **Father's Name : சுப்ரமணியம்** | **Calling : சுயதொழில்** |
| **Village : சுப்ரமணியபுரம்** | **Religion : இந்து** |
| **Taluk : கொளத்தூர், மேட்டூர்** | **Age : 36** |

**(complainant and accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

என்னுடைய சொந்த ஊர் சுப்ரமணியபுரம் பண்ணவாடி. நான் திருப்பூர் செங்கப்பள்ளியில் பின்னளாடை நிறுவனம் நடத்தி வருகிறேன். 2017 ல் நான் மற்றும் சுரேஷ், சக்தி ஆகிய மூவரும் கூட்டாக நிறுவனம் தொடங்கினோம். சுரேஷ் மற்றும் சக்தி கொளத்தூரை சேர்ந்தவர். 2018 ல் நான் சுரேஷ்யிடம் ரூபாய் 1 லட்சம் கடன் வாங்கினேன். அதற்காக இந்த வழக்கு காசோலையை சுரேஷ்யிடம் கொடுத்தேன். காசோலையை சுரேஷ்யிடம் கொடுக்கும்போது காசோலை புத்தகத்தில் முன்பகுதியில் சுரேஷ்யிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டுதான் கொடுத்தேன். 2022 ல் நான் என்னுடைய SBI வங்கிக் கணக்கிலிருந்து நான் சுரேஷ்ற்க்கு நான் பெற்ற ரூபாய் 1 லட்சத்தை இரண்டு தவணையாக 04.06.2022 அன்று இரண்டு முறை ரூபாய் 50,000/- வீதம் ரூபாய் 1 லட்சத்தை திருப்பி அனுப்பி விட்டேன். அதன் பின்னிட்டு நான் காசோலையை திருப்பி அளிக்குமாறு சுரேஷ்யிடம் கேட்டேன். அவர் திருப்பி தராமல் அவருடைய மைத்துனரான மனோகரை வைத்து இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனக்கும், இவ்வழக்கின் புகார்தாரரான மனோகரருக்கும் எவ்வித பணப்பரிவர்த்தனையும் இல்லை. காசோலை கொடுக்கப்பட்டதாக

சொன்ன தேதியான 15.05.2023 ம் தேதி நான் கொளத்தூரில் இல்லை. கோயம்புத்தூரில் எனது மாமியார் வீட்டில் இருந்தேன். 2020 ற்கு பின்னிட்டு நான் HDFC வங்கியில் எந்த பணபரிவர்த்தனையும் செய்யவில்லை. **என்னுடைய வங்கி காசோலை புத்தகம் எ.ம.சா.ஆ.1 ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வங்கி பரிவர்த்தனை கணக்கு பட்டியல் எ.ம.சா.ஆ.2 ஆக ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.** நான் மனோகரிடம் கடைசியாக 2021 ல் தான் பேசினேன். இந்த பொய் வழக்கை தள்ளுபடி செய்து என்னை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒம்/—அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,**
**மேட்டூர்.**